ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

चित्तारे श्रुणु भक्त मत्कवचनं सौख्यप्रदं ते भृशं
प्रीतिं दुःखदपुत्रमित्रधनभूवध्वादिमेषु स्थिताम् ।
सन्त्यज्याशु महेश्वरे कलय तां शम्भौ महानन्ददे
कश्चित्कालमतो भविष्यति किमित्यालोकयं त्वं सखे ॥

उपपत्राधिपः ।

எதனால் நமக்கு ஸுக முண்டாகும், எதனால் கஷ்டமேற்படும் என்கிற அறிவு குன்றியிருக்கிற ஹே மனமே உனக்கு மிகவும் ஸௌக்கியத்தைக் கொடுக்கும் என்னுடைய வசனத்திற்குச் சற்று செவிசாய், எப்பொழுதும் உனக்கு அதிகதுக்கத்தைக் கொடுக்கின்றவையான புதல்வன், நண்பன் பொருள், பூமி, பெண்டீர், முதலியவைகளிலிருக்கும் பிரியத்தை அவைகளிலிருந்தும் சீக்கிரமாக விலக்கி, சகல லோகங்களுக்கு மீசனும், என்றும் அழிவில்லாத பெரிதான மோக்ஷானந்தத்தை யளிப்பவருமான ஸ்ரீசம்புவினிடத்தில் அற்ப காலம் வைத்துப்பார். அதிலிருந்தும் உனக்கு என்ன கிடைக்கின்றதென்பதை நீயே பிறகு அறிந்துகொள்ளலாம்.

இதனால் ஹிதம் அஹிதம் என்பதைச் சற்றும் உற்று நோக்காமல் தனக்குத் தோன்றியபடி கெட்டவழிகளிற் சென்று கஷ்டப்படும் தம்பித்திரனுக்கு ஆப்தரான ஒருவர் அவனுடைய நன்மையைக் கோறி ஹிதோபதேசம் செய்வதுபோல், கெட்ட வழிகளில் சென்று பலவித கஷ்டங்களையடையும் தம் சித்தத்தை ஸுஹிருத்தாகப் பாவித்து நிலையற்றதான இந்த ஸம்ஸாரத்திலுள்ள ஆபாஸமான சில வஸ்துக்களில் மோகம் கொண்டு பிரீதியை வைத்துக் கஷ்டப்படாதே, அழிவற்ற நித்யசுகத்தையளிக்கும் அம்பிகாபதியிடம் கொஞ்சம் காலம் பக்தி செய்தால் உத்தம சுகத்தைப் பெறுவாய். உன் அனுபவத்தினாலுமறியலாம். அவ்விதமே செய்யென்று உபதேசிக்கிறார்.

உபபத்திராதிபர்.

ஆர்யதர்மம்.
க்ஷய-௵ சித்திரை-மீ ௩-உ

# க்ஷய வருஷமும் விவாஹாதி சுபகர்மாக்களும்.

இவ்வருஷத்தில் கல்யாணங்கள் செய்யக் கூடாதென்று சொல்லுகிறார்களே அது உண்மைதானா என்று சங்கைகொண்டு ஆங்காங்கு பலர் வினவுகிறார்களென்பது பிரஸித்தமே. இவ்விதம் சந்தேகம் கொண்ட ஒருவரால் பிரச்னம் செய்யப்பட்ட பள்ளத்தூர் பிர்ம்ம ஸ்ரீ கஸ்தூரி ரங்கய்யங்கார் அவர்கள் நமது ஆர்ய தர்மம் சென்ற 11 ஆவது ஸஞ்சிகையில் இது விஷயமாய்த் தாம் பல கிரந்தங்களைக் கவனித்ததாயும், அவைகளில் இந்த மாதிரி சந்தேகத்திற்கு இடமில்லை என்றும், தாம் பார்த்த கிரந்தங்களுடன் அறிவித்து, உத்திராயணத்தில் சுபகாரியங்கள் செய்யக் கூடாதென்றுநிஷேதமிருப்பதாகத் தெரியவில்லை, இருந்தால் அறிவிக்க வேண்டும் என்றும் எழுதிய விஷயத்திற்கு 'க்ஷயவருஷத்தில் சுபகாரியங்கள் கூடாதென்று காலாமிருதத்தில் கூறப்பட்டிருக்கின்றது' என்று அந்தவசனத்துடன் வைத்தீச்வரன்கோவில் K. முத்துஸாமிசாஸ்திரிகளால்வெளியிடப்பட்டு அடுத்த (௧௯௮) பக்கத்தில் சேர்த்திருக்கும் விஷயமும் நம் நேயர்கள் கவனிக்கக் கூடியதே.

இந்த மாதிரி விசாரம் இக்காலத்திற்கு அவசியமில்லை என்று சிலர் கருதினாலும், ஆஸ்திகர்களான சிலர் அதிகமான பொருட் செலவையும், சரீர சிரமத்தையும் எதிர்பாராமல் நடத்தப்படும் வைதிககர்மாவை விதிப்படி நடத்தினால் தான் பயனுள்ளதாகும்; இல்லாவிட்டால் வீணேயாகும். ஆகையால் சாஸ்திரங்களின் உண்மையான அர்த்தத்தை அறிந்து கொண்டு நம்மாலியன்றவரையில் அவ்விதமனுஷ்டிக்க வேண்டுமென்று இதன் உண்

மையை அறிய விரும்புகிறபடியால் அவர்களுக்காக நானும் என் அபிப்ராயத்தை யறிவிக்க முன் வருகிறேன்.

வைத்தீச்வரன் கோவில் முத்துஸாமி சாஸ்திரிகள் கூறிய படி காலாமிருதத்தில் விவாஹப் பிரகரணத்தில் சில புஸ்தகத்தில் 54 ஆவது சுலோகமாகவும், சில புஸ்தகத்தில் 99 ஆவது சுலோகமாகவும் உள்ள சுலோகத்தில்,

"अब्देषु क्षयवत्सरो न शुभकृत्"

வருஷங்களுக்குள் க்ஷய வருஷமானது விவாகம் முதலான சுப காரியங்களை நடத்தினால் க்ஷேமத்தையுண்டு பண்ணாது' என்று பொதுவாய்க் கூறப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தால் க்ஷய வருஷத்தில் சுபகாரியம் செய்யக்கூடாதென்று பொதுவாய்க் கூறப்பட்டிருக்கிறதேயன்றி, அந்த வருஷம் பூராவுமா? அல்லது சில மாதங்களிலா? அம்மாதங்கள் எவை? என்பவை போன்ற யாதொரு விசேஷமும் கூறப்படவில்லை. ஆனாலும் இதற்கு வியாக்கியானம் செய்திருக்கின்ற வெங்கடபஜ்வாவால் விசேஷமாகக் காண்பிக்கப்பட்டிருக்கின்றது.

அஃதாவது "அப்தேஷு க்ஷய வத்ஸர:" என்கிறவிடத்தில் தேசபேதத்தைக் கொண்டு தீர்மானம் செய்துகொள்ளவேண்டும். இவ்விதமே

विन्ध्यस्योत्तरदिग्भागे षण्यन्तं वत्सरं त्यजेत् ।
तस्य दक्षिणदेशेषु त्रिमासं वर्जयेत्सदा ।
अङ्गवङ्गकलिङ्गेषु मासषट्कं विवर्जयेत् ॥

விந்தியமலைக்கு வடக்கிலிருக்கும் தேசங்களில் க்ஷயவருஷம் பூராவும் சுபகர்மாக்கள் செய்யக்கூடாதென்றும், அதற்குத் தெற்கிலுள்ள தேசங்களில் மூன்றுமாத காலம் சுபகர்மாவை அனுஷ்டிப்பதற்கு அருகமில்லை என்றும், அங்கவங்காதி தேசங்களில் ஆறு மாதகாலம் விலக்கவேண்டுமென்றும், "பாகுரி" என்கிற மஹரிஷி கூறியிருப்பதாக வெளியிட்டிருக்கிறார். இதனால் மூலத்தில் பொதுவாக க்ஷயவருஷமென்று சொல்லியிருப்பதை அந்த வருஷம் பூராவுமில்லை, மூன்று மாத காலம் தான் சுபகர்மா அனுஷ்

டிக்கக் கூடாதென்று அறிவித்திருக்கிறார். அந்த மூன்று மாதங்களும், எந்த மூன்று மாதங்கள் என்று ஸ்பஷ்டமாய்க் குறிப்பிட்டுக் காண்பிக்கப்படவில்லை. ஆனாலும் காலாமிருதக் கிரந்தத்தாலும் அதன் வியாக்யானத்தாலும் க்ஷய வருஷத்தில் மூன்று மாதங்கள் தான் சுபகர்மா செய்யக்கூடாதென்று நிச்சயமாய்த் தெரிகின்றது.

"காலவிதானம்" என்னும் கிரந்தத்தில் 23-வது பக்கத்தில் 94-ஆவது சுலோகாரம்பத்தில் உபநயநத்தில் வர்ஜிக்கவேண்டிய காலங்கள் என்று துவக்கத்தில் சொல்லிவிட்டு

ऋत्वन्तेऽपि च मासान्ते नक्षत्रान्ते तथा विषः ।
वत्सरान्ते च तिथ्यन्ते षडशीति मुखे तथा ॥
व्याघाते च तथा वज्रे विष्कम्भे परिघे तथा ।
वैधृत्यां च व्यतीपाते शूलगण्डादिगण्डयोः ॥२॥
मृतभेचापराह्णे च रात्रौ सन्ध्याद्वयोरपि ।
अन्धभेचाधिमासादौ वर्जयेन्मौञ्जिबन्धनम् ॥३॥
अविचार्यैव कुर्याचेत् द्रव्यविद्यायुषां क्षयः । इति

ருதுவின் அந்தம், மாஸாந்தம், நக்ஷத்திராந்தம், விஷகடிகை, வர்ஷாந்தம், திதியின் அந்தம் முதலான இவைகளில் விசாரியாமல் உபநயனத்தைச்செய்தானுகில் பொருள்வித்யைஆயுள் இவைகள் குறைவடையும் என்று கூறி, பிறகு இதற்கு அபவாதம் என்று உபக்கிரமித்து,

वर्षान्ते पक्षकं चैव मासान्ते तु दिनत्रयम् ।
नक्षत्रान्ते द्विघटिकां तिथ्यन्तेऽपि तथैव च ॥
ऋत्वन्ते दिनमेकं च योगान्ते घटिकाद्वयम् ।
व्याघातादौ तु षण्णाड्यो वर्ज्याश्शेषाश्शुभावहाः ॥

வர்ஷாந்தமான க்ஷய வருஷத்தில் ஒரு பக்ஷம் அதாவது 15 நாள் சுபகாரியங்களுக்குக் கூடாதென்றும் மாதாந்தம், நக்ஷத்திராந்தம் முதலியவைகளில் முறையே மூன்று நாள் இரண்டு நாழிகை ஒரு நாள் என்று பலவாறாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் கால விதானத்தில் கூறப்பட்டிருக்கும் 94 ஆவதான பொதுவான

சுலோகத்தாலும் அதற்கு அபவாதமாய்க் கூறப்பட்ட வர்ஷாந்தே பக்ஷகம் என்கிற சுலோகத்தாலும இவைகளின் வியாக்கியானத்தாலும் க்ஷயவருஷத்தில் 15நாள் தான் சுபகாரியங்களுக்குக் கூடாதென்று ஸ்பஷ்டமாய்த் தெரிகின்றது.

இந்தக்கிரந்தத்தாலும் 15 நாள் எந்த ஸமயம் விலக்கவேண்டுமென்கிறதை நன்றாய் அறிவிக்கப்படவில்லையென்று ஸாமான்யமாய்ப் பார்ப்பவர்களுக்குத் தோன்றலாம். கவனித்தால் க்ஷய வருஷத்தின் முடிவில் 15 தினம்கூடாதென்று ஏற்படலாம். அஃதெங்ஙனமெனில் இங்கு 'வர்ஷாந்தே, வத்ஸராந்தே' என்று இந்தப்பதங்களைப்போட்டிருக்கிறார்.

वर्षाणि च वर्ष च वर्षाणि, वर्षाणां अन्तं वर्षान्तं

என்கிற துவந்துவ தத்புருஷஸமாஸங்களினால் துவந்துவ ஸமாஸத்தின் முடிவிலிருக்கும் பதமானது ஒவ்வொன்றிலும் ப்ரத்தியேகமாய் ஸம்பந்திக்கும் என்கிற நியாயத்தால் வருஷங்களுக்கு முடிவிலிருக்கும் க்ஷய வருஷமென்றும் வருஷத்தினுடைய கடைசி என்கிறதினால் க்ஷய வருஷத்தில் கோடியில் 15 நாள் என்றும் பொருள் கிடைக்கும். கிரந்த கர்த்தாக்களும் இவ்வித அபிப்ராயத்தைக் கொண்டு தான் வேறாக இன்ன ஸமயம் என்று குறித்துக் காட்டவில்லை. இவ்விதமில்லாவிடில் பிரபவ வருஷத்தின் தோஷத்தைக்கூறுமிடத்தில் प्रभवादौतु मासस्यात् பிரபவவருஷத்தினுடைய ஆதியில ஒருமாதம் என்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லியிருப்பதுபோல் இங்கும் "क्षयादौ" என்று கூறியிருப்பார்கள். இக்கருத்தைக்கொண்டு தான் மற்றுமுள்ள ஜோதிட நூல்களிலும் உத்திராயணத்தில் சுபகாரியங்களைச் செய்யலாமென்று சொல்லியிருக்கிறது. இதற்கு அபவாதமாக वर्षान्ते वर्जयेत्पक्षं வருஷத்தின் முடிவில் 15 தினங்களை விலக்கவேண்டுமென்று ஒரு கிரந்தக்காரர் ஸ்பஷ்டமாய் வெளியிட்டிருக்கிறார்.

இதனால் க்ஷய வருஷத்தில், காலாமிருதம், அதன் வியாக்கியானம், இவைகள் ரீதியாய் முடிவிலுள்ள மூன்று மாதங்கள் சுபகாரியங்களுக்கு சிலாக்யமில்லை என்றும், காலவிதானக் கிரந்த ரீதியாய் வருஷமுடிவில்15-தினங்கள் தான் சுபகாரியங்களுக்குவிலக்க

வேண்டுமென்றும் முன்னுள்ள மாதங்களில் சுபகர்மாக்களைச் செய்யலாமென்றும்வெளியாகின்றது. இந்தத் தோஷத்தை ஒருவர் விவாஹப் பிரகாணத்தில் கூறியிருப்பதாலும் மற்றொருவர் உபநயனப் பிரகாணத்தில் சொல்லியிருப்பதாலும் ஸங்கோசம் செய்யாமல் நிர்ப்பந்தமாய் நடத்தியே தீரவேண்டுமென்கிற ஸீமந்தம் முதலான சிலவைகளைத் தவிர மற்ற சுபகாரியங்கள் யாவும் தோஷமுள்ள இந்தக்காலத்திற் செய்யக்கூடாதென்று கிரந்தங்களின் அபிப்பிராயமாகத் தெரிகின்றது. பள்ளத்தூர் ஜோஸியம் கஸ்தூரிரங்கய்யங்கார் அவர்களுடைய அபிப்பிராயமும் க்ஷயவருஷத்தில் பூர்வபாகத்தில் விவாஹாதி முகூர்த்தங்கள் நடத்தக்கூடாதென்று நிஷேதமிருப்பதாகத் தெரியவில்லையென்றும் இருந்தால் அறிவிக்கவேண்டுமென்றும் தான் இருக்குமென்று நான் கருதுகிறேன். இது விஷயமாய்ச் சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்ததில் எனக்குஏற்பட்ட சொந்தஅபிப்பிராயத்தை அறிவித்திருக்கிறேன்

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

நிகழும் ஸௌரமானவருஷத்தின்பெயரிலும், அதில்சுபகாரியங்கள் செய்யவேண்டிய விஷயத்திலும் சிலருக்குச் சிற்சில ஸந்தேகமுண்டாயிருக்கின்றது. அதாவது இந்த வருஷம் க்ஷயமென்று பெயருடையதா? அல்லது அக்ஷயமென்று பெயருடையதா? என்று. இம்மாதிரி ஸம்சயங்களும் நம் பாதநாட்டில் உண்டாயிற்றேயென்று ஸம்ஸ்கிருதபாஷையின் ஞாபகமே இல்லாத இக்காலத்தில் ஆச்சரியப்படவேண்டியதில்லை. பிரபவாதி அறுபது வருஷங்களின் பெயர்களைக் குறிக்கும் ஸம்ஸ்கிருத சோதிடசாஸ்திர வசனங்களைக் கேட்டவர்களுக்கு இச் சம்சயம் நேர்ந்திராது அறுபது வருஷங்களின் பெயரைக்குறிக்கும் சுலோகங்களை நமது ஸ்ரீ மடத்துப் பஞ்சாங்கத்தில் அனேக வருஷங்களில் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் **"क्रोधनः क्षयः"** என்று **'क्षय'** க்ஷய என்ற பெயரே வழங்கப்பட்டிருக்கிறது. ஆனலிங்கு **"क्रोधनोऽक्षयः"** என்று என் பாடமிருக்கக்கூடாது. அப்படியானல் **'अक्षय** என்றே பதம்பிரிக்கலாமேஎன்றுசிலருக்குஆசங்கையுண்டாகலாம். அதற்கு,

"जीवन्ति क्षयवत्सरे" "अब्देषु क्षयवत्सरो न शुभकृत्" "क्षय-मिति युगस्यान्त्यस्यान्त्यं बहुक्षयकारकं"

என்பதாதி வசனங்களில் **क्षय** என்பதற்கு முந்தி அகாரத்தைச் சேர்த்துப் பதம்பிரிக்கும்படியான சங்கைக்கே இடங் கிடையாது. '**क्रोधनोऽक्षयः**' என்று பாடமிருக்கக் கூடாதாவென்று சங்கிப்பது இவ்வசனங்களைப் பார்க்காத தோஷந்தவிர வேறல்ல. அன்றியும் அறுபது வருஷங்களின் பயனைப் பொதுவாய்க் கூறுமிடத்து,

"स्वाभिधानसमं ज्ञेयं फलमेषां मनीषिभिः"

இவ்வருஷங்களின் பயன் அததன் பெயருக்குத் தக்கபடி அறிஞர் அறிந்துகொள்ளவேண்டியது.

என்றுகூறியதையனுஸரித்துப் பிரபவாதி அறுபதுவருஷங்களின் விசேஷ பலனைத் தனித்தனியாகக் கூறும்போது பிருஹத்ஸம்ஹிதையென்னும் கிரந்தத்தில் வராஹமிஹிராசாரியார்,

"क्षयमिति युगस्यान्त्यस्यान्त्यं बहुक्षयकारकं
जनयति भयं तद्विप्राणां कृषीवलवृद्धिदम् ।
उपचयकरं विट्छूद्राणां परस्वहृतां तथा
कथितमखिलं षष्ट्यब्दे यत्तदत्र समासतः ॥"

அறுபது வருஷங்களுள் ஐந்தைந்து வருஷங்களுக்கு யுகம் என்று பெயரிட்டு அறுபது வருஷங்களையும் பன்னிரண்டு யுகங்களாகப் பாகித்துக் கூறுமிடத்துக் கூறுகின்றார்.— கடைசி பன்னிரண்டாவது யுகத்தின் ஐந்து வருஷங்களுள் ஐந்தாவதான கடைசி வருஷமானது க்ஷயமென்ற பெயருடையதாகும். அது (தன் பெயருக்கு அனுகுணமாக) பலவிதமாக ஜனங்களுக்கு நாசத்தைச் செய்கின்றது. பிராம்மணர்களுக்கு பயத்தையுண்டுபண்ணுகின்றது. பிறர் ஸொத்தையபஹரிக்கும், பயிரிடுவோருக்கும், அவ்விதமான, வைசிய சூத்திரர்களுக்கும் விருத்தியைச் செய்கின்றதாயினும், பிறர் ஸொத்தை அபஹரிப்பவர்களுக்கு இடங் கொடுப்பதனல் வெகுபேர்களுக்குப்பலவிதமான நாசத்திற்குக் காரணமாகின்றது. இவ்வாறாக அறுபதுவருஷங்களின் தனித்தனிப் பயன் இங்கு சேர்த்துக் கூறப்பட்டது.

என்று பிருஹஸ்பதிசாரத்தின் 52-வது சுலோகத்தில் கூறியிருக்கின்றார். ஆகையால் இவ்வருஷத்திற்கு க்ஷயமென்று பெயர். அக்ஷயமென்பது தவறு. 'க்ஷய' என்பது அமங்களமாகத் தோன்றுகின்றதே என்றால் 'வியய, விரோதி, விகிருத, கர, துர்முக, விகாரி, குரோதி, பராபவ' என்பதாதி வருஷங்களைப் போல் இதையும் கண்டு தெளிக.

இனி இவ்வருஷத்தில் விவாஹாதி சுபகாரியங்கள் செய்யலாமா? என்ற ஸந்தேஹத்திற்கு நிர்ணயம் கூறுவாம். வியய வருஷம் முதலிய வருஷங்களில் போல க்ஷயவருஷத்திலும் விவாஹாதி சுபமுகூர்த்தங்களைச் செய்யலாம். ஆனால் காலாமிருதம் என்ற கிரந்தத்தில் 3-வது பிந்து 54-வது சுலோகத்தில்,

"अब्देषु क्षयवत्सरो न शुभकृत्"

பிரபவாதி அறுபதுவருஷங்களுள் க்ஷயவருஷம்சுபகாரியல்ல என்று கூறப்பட்டிருக்கின்றதே என்று சிலருக்குச் சங்கையுண்டாகலாம். அதற்கு இடமில்லை.

"वर्षान्ते पक्षकंचैव मासान्ते तु दिनत्रयम्"

வருஷமுடிவில் 15-நாளும், மாதமுடிவில் 3-நாளும் வர்ஜிக்க வேண்டியது.

என்று இதற்கு அபவாதமாய் காலவிதானமென்கிற கிரந்தத்தில் 97-வது சுலோகத்தில் 15-நாட்கள்தான் வர்ஜிக்கவேண்டியதாகக் கூறப்படுகின்றது. அந்தக் காலாமிருத சுலோகத்தின் வியாக்கியானத்தில்,

"दश चान्द्रे तु वर्षान्ते सौराब्दे तु हि वासरम् ।
तथा द्विरात्रं जैवान्ते वर्जयेच्छुभकर्मसु ॥"

சாந்திரவருஷத்தின் கடைசியில் 10-நாளும், ஸௌரவருஷத்தின் கடைசியில் ஒருநாளும், பார்ஹஸ்பத்திய வருஷத்தின் கடைசியில் இரண்டுநாளும் சுபகாரியங்களுக்கு வர்ஜிக்க வேண்டியது.

என்று ஸாமான்யமாய்க் கூறப்படுகின்றது. இவ்வசனங்களையெல்லாம் கவனிக்காவிடினும் அந்த காலாமிருத வசனத்தின் வியாக்கி

யானத்தில்— க்ஷயவருஷம் சுபகாரியல்லவென்று கூறப்பட்ட நிஷேதத்திற்கு தேசபேதத்திற்குத் தக்கபடி வியவஸ்தை வைத்துக்கொள்ளவேண்டும். அதாவது—

“विन्ध्यस्योत्तरदिग्भागे षष्ट्यन्तं वत्सरं त्यजेत् ।
तस्य दक्षिणदेशे तु त्रिमासं वर्जयेत्सदा ॥
अङ्गवङ्गकलिङ्गेषु मासषट्कं विवर्जयेत् ।”

விந்தியமலைக்கு வடக்குப் பாகத்தில் 60-வருஷங்களின் கடைசிவருஷத்தை விலக்கவேண்டும். அதற்கு (விந்தியமலைக்கு)த் தென்தேசத்தில் மூன்று மாஸம் வர்ஜிக்கவேண்டும். அங்க, வங்க, களிங்க தேசங்களில் ஆறுமாதம் வர்ஜிக்கவேண்டும். என்று க்ஷய வருஷத்தில் நம் தேசத்திற்கு மூன்று மாதங்கள் தான் விலக்கவேண்டியதாகக் கூறுகின்றது. அந்த மூன்று மாதங்களும் வருஷக் கடைசியிற்றானென்று ஏற்படுகின்றது. அதே 54-வது சுலோகத்தில் இதர வருஷஸந்தி, மாஸஸந்தி, திதி ஸந்தி, நக்ஷத்திரஸந்தி, யோகஸந்தி, கரணஸந்தி முதலியவைகளில் வர்ஜிக்கவேண்டியதாகச் சொல்லப்படும் நாள் நாழிகை அந்திய பாகந்தான் என்று கூறப்பட்டிருக்கின்றது காலவிதானத்திலும்.
“ऋत्वन्तेऽपि च मासान्ते नक्षत्रान्ते तथा विषे । वत्सरान्ते च विध्यन्ते”
என்று 94-வது சுலோகத்தில் ருதுமுடிவில், மாதமுடிவில், நக்ஷத்திரமுடிவில், வருஷமுடிவில் என்று கடைசியாகத் தான் விலக்கப்படவேண்டியதாகக் கூறப்படுகின்றது. அதனால் விந்தியமலைக்கு தென்தேசமாகிய நம்நாட்டில் வருஷத்தின் பின்பாகமாகிய மூன்று மாதங்கள் அதாவது தை, மாசி, பங்குனி மாதங்கள் தான் வர்ஜிக்க வேண்டியதாகும். அன்றியும் க்ஷயவருஷமே கூடாது என்று ஸ்பஷ்டமான நிஷேதவசனமுமில்லை, காலவிதானாதி வசனங்களால் வருஷமுடிவில் 15-நாட்கள் தான் வர்ஜிக்க வேண்டியதாகின்றது. எப்படியானாலும், க்ஷயவருஷ சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் விவாகாதி சுப முகூர்த்தங்கள் செய்வதில் எவ்வித ஆக்ஷேபமுமில்லை. ஆகையால் அந்த மாதங்களில் விவாஹாதிசுபமுகூர்த்தங்களை நடத்தி யாவரும் மேன் மேலும் சிரேயஸ்ஸையடைவார்களாக.

பத்திராதிபர்,

# சங்கைக்கு மறுமொழி.

சென்ற பங்குனிமீ 19உ குருவாரத்தன்று வெளியான ஆர்யதர்மம் பத்திரிகையில் பள்ளத்தூர் ஜோஸியம் கஸ்தூரி ரெங் கய்யங்காரவர்கள் ஓர் ஸந்தேஹம் என்று தலையங்கமிட்டு, வரு கிற "க்ஷய" வருஷத்தில் விவாஹாதிசுபகாரியங்கள் செய்யலா மா செய்யக்கூடாதாவென்று சிலர் வினவுவதாயும் அதையுத்தே சித்துத்தம்மால் பலக்ரந்தங்கள் பார்க்கப்பட்டனவென்றும், அக்கி ரந்தங்களின் பெயரையும், குறிப்பிட்டு அறிவித்து அவைகளில் சுபகாரியங்களுக்கு நிஷேதமில்லையென்றும், அப்படியிருந்தால் நம் ஆர்யதர்மத்தின் வாயிலாகத் தெரிவிக்கவேண்டுமென்றும் கே ட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எந்தக் கிரந்தங்களை அவர்கள் குறிப்பிட்டு அவைகளில் கூறப்படவில்லையென்று எழுதியிருக்கிறார்களோ அவைகளிலொ ன்றான காலாம்ருதம் என்னும் ஜோதிஷ கிரந்தத்தில் விவாகப்பிர கரணமான மூன்றாவது பிந்துவில் 54 அல்லது 99-வது சுலோ கத்தில்

अब्देषु क्षयवत्सरो न शुभकृत् ।

என்று பொது விதியில் க்ஷயவத்ஸரத்தைச் சுபகாரியத்திற்கு விலக்கியும் ஷி சுலோகத்தின் வியாக்கியானத்தில் "அவ்விதமே பாகுரி சொல்லுகிறார்" என்று உபக்கிரமித்து,

विन्ध्यस्योत्तरदिग्भागे षष्ठ्यन्तं वत्सरं त्यजेत् ।
तस्य दक्षिणदेशे तु त्रिमासं वर्जयेत्सदा ॥
अङ्गवङ्गकलिङ्गेषु मासषट्कं विवर्जयेत् ।
प्रभवादौ तु मासस्स्यात् सर्वकर्मसु गर्हितः ॥

என்று விந்தியமலைக்கு வடக்கில் க்ஷய வருஷம் பூராவும் சுபகாரி யங்களுக்கு நிஷேதமென்றும் அதற்குத் தெற்கில் மூன்று மாதங்

கள் கூடாதென்றும், அங்கம் முதலான தேசங்களில் ஆறுமாதம் தோஷமென்றும், பிரபவ வருஷத்தில் முதல்மாதம் தோஷமென்றும், தெரிவித்திருப்பதால் க்ஷயவருஷத்தில் கடைசியான மூன்று மாதங்களும் பிரபவ வருஷம் முதல் மாஸமும், சாஸ்திரரீதியாய் வர்ஜிக்கப் பட்டிருக்கிறதென்பதை பத்திரிகாமூலம் அறிவித்துக் கொள்ளுகிறேன்.

கே. முத்துஸாமி சாஸ்திரிகள்
வைத்தீசுவரன்கோவில்.

---

# வித்யா.

(கஅஅ-வது பக்கத்தொடர்ச்சி)

உடனே கம்பர் உத்தமமான ஓர் பத்யத்தினால் "இரண்டு நாளுக்குப் பிறகு இக்கொலையை எனக்கு விதியுங்கள்" என்று ப்ரார்த்தித்தார். அரசனும் அவருடைய கவிதையினால் அபகரிக்கப்பட்ட மனதுடையவனாய், அப்படியே ஏற்றுக்கொண்டார். கம்பரும் தன்னை அண்ணா என்று அழைத்த அங்நாபிதனோடு அவன் குடிசையே போய்ச் சேர்ந்தார்.

ஒரு நாள் இரவில் அனேகம் பத்யங்களினால் சாரதா தேவியை ஸ்தோத்திரம் செய்தார். உடனே அம்பிகை பிரத்யக்ஷமாகி கம்பரால் பிரார்த்திக்கப் பட்ட தன் கால் சிலம்புகளில் ஒன்றைக் கொடுத்து மறைந்தாள். மறு நாள் அச்சிலம்பை எடுத்துக் கொண்டு அங்நாபிதனோடு ராஜகிருஹத்தை அடைந்தார். தன் பத்னியோடு ஓர் ஆஸனத்தில் உட்கார்ந்திருக்கும் அரசனிடத்தில் அச்சிலம்பைக் கொடுத்தார். அப்பூஷணத்தைப் பார்த்த பத்னி, மிகவும் ஆனந்தத்தையடைந்து, மற்றோர் சிலம்பையும் கொண்டு வரச்சொல்லும்படி அரசனை ப்ரார்த்தித்தாள். இவ்வாபரணம் உன்னால் எப்படி அடையப்பட்டது என்று வினவப்பட்ட கம்பர், பின் வருமாறு தெரியப்படுத்தினர். "எங்களுடைய பிதாமஹரால்

ஓர் அரசனிடத்திலிருந்து ஸன்மானமாகப் பெறப்பட்டது. நாங்கள் இருவரும் பிதாவின் தனத்தைப் பிரித்துக்கொள்ளும் தருணத்தில் இவனால் மற்றொரு சிலம்பானது எடுத்துக் கொள்ளப்பட்டது" என்று பக்கத்தில் இருக்கும் நாபிதனைக்காட்டினார். உடனே அதையும் எடுத்து வரும்படி கட்டளையிடப் பட்ட அந்நாபிதன், ஸரியான பதில் கூறாமல் தாறுமாறாகச் சொல்லவே தன் பிருத்யர்களைக்கொண்டு அடிக்கும்படி அரசன் கட்டளையிட்டான். அடியின் வேதனை பொறுக்கமுடியாத அந்நாபிதன், அரசனைப்பார்த்துச் சொல்லலானான்.

"ஓ மஹா ராஜனே! ஒன்றையும் விடாமல் உண்மையைக் கூறிவிடுகிறேன். இக்கம்பருக்கும் எனக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை. உங்களுடைய ஆஸ்தான பண்டிதர்களால் ஏவப்பட்ட நான் இக்காரியத்தில் பிரவேசித்தேன். என்னை விட்டு விடுங்கள்" என்று சொல்லவே அரசன், "ஆஹா! மஹா உத்தமரான கம்பரை என்னகாரியம் செய்யத் துணிந்தோம்." என்று மூர்ச்சையடைந்தான். பிறகு வேலைக்காரர்களால் ப்ரக்ஞை அடைவிக்கப்பட்டு ஒரு விதமாகத் தெளிந்தெழுந்தவுடன், முதலில் எல்லாப்பண்டிதர்களையும் தன் தேசத்திலிருந்து, துரத்திவிட்டுக் கம்பரை ஆலிங்கனம் செய்துகொண்டு, தன் புத்ரியையும் அவருக்கு விவாஹம் செய்து வைத்தார்.

பாருங்கள்! வித்யையினாலல்லவா முதலில், உயிர்லாபம்,—அபகாரம் செய்த பண்டிதர்களுக்கு ப்ரதீகாரம், தேவியின் ப்ரத்யக்ஷம், ராஜகுமாரியின் விவாஹம் இவ்வனைத்தும் கம்பருக்கு ஏற்பட்டது. ஆகையால் எல்லோராலும் அவச்யம் வித்யையானது அப்யஸிக்கப்பட வேண்டியது, என்று இத்துடன் உபஸம்ஹாரம் செய்துகொள்ளுகிறேன்.

M. R. விச்வநாதசாஸ்திரிகள்,

சிதம்பரம்.

யமதண்டனைக்குள்ளாய் மீளவும் பூவுலகத்தில் குண்டலினி என்னும் நதியில் தவளையாகப் பிறந்திருந்தனன். க்ஷீரநதி அக்குண்டலினியோடு கலந்து வருகின்றபோது அவன் ஒரு தண்ணீர்ப் பாம்பின் வாயிலகப்பட்டு இறக்குங்கால் பூர்வக்ஞானமுண்டாய் மோக்ஷமடைந்தனன்.

இப்படியே இந்த க்ஷீரநதியில் வசிக்கின்ற உயிர்களுடைய ஸ்பரிசத்தாலும், தீர்த்தஸ்பரிச முதலியவற்றாலும் முக்தியடைந்தவர்கள் இவ்வளவினரென்று கணிக்கக்கூடுமோ? கூடாது என்க.

பராசக்தி மூன்றுவித ஸ்வரூபமானது.

முன்னொருகாலத்தில் பிரமன், தனதுவம்சத்திற் பிறந்திறந்த அசுரர்களுக்கு மீளவும் பிராணனையும், அவர்கள் வேண்டும் வரங்களையும் தானே கொடுப்பதற்கு வேண்டிய சக்தியைப் பெறுதற்கெண்ணி ஸ்ரீபுர நகரமாகிய காஞ்சி க்ஷேத்திரத்தில் பரமாகாசமூலத்தில் வீற்றிருக்கும் காமாக்ஷியின் ஸந்நிதானத்தையடைந்து தேவியைத் தியானித்துத் தவஞ்செய்யத்தொடங்குங்கால், அத்தவத்துக்கு எவராலும் சிறிதும் இடையூறு வாராவண்ணம் விஷ்ணுமூர்த்தியினுடைய காதினின்றும் வெளிப்பட்ட மது கைடபர் என்னும் அசுரர்களைக் காவலாக வைத்துத் தான் தவம் செய்து வந்தனன்.

அசுரகாதகியாகிய பராசக்தி பிரமனுக்குப் பின்பக்கத்தில் இடம் வலங்களிற் காவலிருக்கின்ற அவ்வசுரர்களைச் சங்கரிக்க எண்ணி, அவ்வசுரர்களுடைய நடுவில் தனது ஆச்சரியமாகிய மாயையினால் விஷ்ணுவடிவங்கொண்டு வந்து சக்கிராயுதத்தினால் அவ்வசுரருடைய சிரங்களை அறுத்துத் தள்ளிப் பிலாகாசத்துக்கு ஆக்னேய திக்கிற்சென்று அங்கு நின்ற திருக்கோலமாய்த்தனது ஸ்வரூபமாகிய பிலத்தின் முகமாக நின்றனள்.

மதுகைடபர் சிரம் அறுபட்டு விழுகின்ற காலத்தில் பேரிரைச்சலிட அவ்வோசையைக் கேட்ட பிரமன் திடுக்கிட்டு அவ்வசுரரிடம் வேகமாய் வந்து அவர்களுடைய தலைகள் அறுபட்டு உதிரவெள்ளத்தில் செல்ல இரண்டு முண்டங்களும் துடிப்பதைக் கண்டு 'ஆ! ஆ! இஃது என்ன ஆச்சரியம்' என்று அதிககோபங்

கொண்டு 'இவர்களைக் கொன்றவன் யாவன்? அவனெங்கே'என்று கண்களைச் சுழலமிட்டுத் திக்குகளைப் பார்க்கின்றபொழுது ஆக்னேயதிக்கில் சக்கரதாரியாய் விஷ்ணுரூபங்கொண்டு பயந்தோடுவதைப்போல் ஓடுகின்ற தேவியாகிய விஷ்ணுமூர்த்தியைக் கண்டு 'இவர்தாம் அவர்களைக் கொன்றிருக்கவேண்டும்' என்று எண்ணி நிச்சயித்து விரைவாகவோடி அவரைச் சமீபித்துக் கொல்ல உத்தேசித்துக் கோபங்கொண்டு பிரமாஸ்திரத்தைப் பிரயோகம் செய்யத் தொடங்கினன். அதைக் கண்ட தேவியாகிய விஷ்ணுமூர்த்தி "பிரமனே, நானு உன்னுடைய காவலாளிகளைக் கொல்லுவேன்? அவர்களைக் கொன்றவர் உருத்திரமூர்த்தியே. அவர் இப்பொழுது தான் போயினர். அவரை நீ பார்க்கவில்லையா? அவர் உன்னுடைய பின்புறத்திற்றான் ஓடுகின்றார். திரும்பிப் பாரும் பாரும்" என்று தமது இரண்டு கரங்களையும் நீட்டினர். உடனே பிரமன் திரும்பிப் பார்த்தனன். அவன் திரும்பிப் பார்ப்பதற்கு முன் விஷ்ணுமூர்த்தியாய்க் கூறிய தேவியே அப்பிரமன் கண்ணுக்குத் தோன்ற உருத்திரமூர்த்தியாய் வாயுதிக்கை நோக்கிச் சென்றனர். அதனையறியாத பிரமன் தன்னெதிரில்நின்ற விஷ்ணுமூர்த்தியைப் பார்த்து "நீர் அவர்களைக் கொன்றதாக நானே அனுமானித்து வந்தேனேயன்றி நீர் கொன்றவரன்று" என்று சொல்லிவிட்டு வாயுதிக்கைத் திரும்பிப் பார்த்தனன். அந்தத் திக்கில் காலகாலரூபியாயும், அதிபயங்கரராயும், அகோரரூபியாயும், சூலபாசபாணியாயும் இருக்கிற பைரவரூபியாய் ஓடுவதைக்கண்டு 'இவர்தாம் கொன்றிருக்கவேண்டும்' என்று எண்ணிக் கோபத்துடன் அவரைச் சமீபித்தனன். அங்கு உருத்திரமூர்த்தியாய்த் தோன்றிய தேவி அப் பிரமனைப் பார்த்து "பிரமனே, உனக்கு எதனால் கண் சிவந்திருக்கின்றது? உனக்கென்ன கோபம்?" என்று கேட்கப் பிரமன் ஒன்றுஞ் சொல்லாது நின்றனன். அப்பொழுது உருத்திரமூர்த்தியாகிய தேவி கோபித்தவள்போல் பாசுபதாஸ்திரத்தைத் தாங்கித் திவ்ய தேஜஸோடும் ஆகாயத்தில் பிரகாசித்து மறைந்து போயினள். அதுகண்ட பிரமன் ஆச்சரியமடைந்து 'உருத்திரமூர்த்திதான் கொன்றவர்' என்று சொன்ன விஷ்ணுமூர்த்தியைத் திரும்பிப் பார்த்தனன். அவரும் ஆகாயத்தில் மறைந்துபோயி

னர். அதுகண்ட பிரமன் 'நாம் அக்னிமூலையிற்கண்ட திருமாலையுங்காண்கிலோம்; வாயுமூலையிற்கண்ட உருத்திரரையுங் காண்கிலோம்; இவ்விரண்டு உருவங்களையும் காட்டியது எதுவோ' என்று ஒன்றுந் தோன்றாது நடுக்குற்றுப் 'பிராணன் தப்பினாற் போதும்' என்று தன்னுலகம் போய்ச் சேர்ந்தனன்.

அதுமுதல் இவை காஞ்சி நகரத்தில் வாயுமூலையிற் காட்டிய பெருமானது ஆம்பர (மா) விருக்ஷரூபமாய் எக்காலத்தும் அழிவில்லாமற்றோன்றி ஏகாம்பரம் எனவும், அதுபோலவே அந்த வாயுதிக்குக்கு நேராகிய அக்கினிதிக்கில் காட்டிய விஷ்ணுரூபமானது பிரமன் அசுவமேதம் செய்யத்தொடங்கிய காலத்து அந்த யாகாக்கினியில் திவ்ய தேஜஸோடு தோன்றி வரதராஜமூர்த்தி எனவும், இந்த இரண்டு உருவங்களையும் காட்டியது யாதொரு சக்தியோ, அது அந்த இரண்டிடத்துக்கும் மத்தியிலுள்ள பிலாகாச ஸ்தானத்திற்றோன்றிக் காமாக்ஷி தேவி எனவும் பிரகாசித்துக் கொண்டு விளங்குகின்றன.

முதல் அத்தியாயம் முற்றிற்று.

---

ஸ்ரீ காமாக்ஷி தேவ்யை நம:

## இரண்டாம் அத்தியாயம்.

### விஷய சூசனை.

இந்த அத்தியாயம் வரதராஜருடைய க்ஷேத்திரத்தினெல்லை "க்ஷேத்திராங்கி என்னும் துர்க்காலயம் முதல் நரசிம்மராலயம் வரையில்" எனவும், அவ்வெல்லைக்குள் முக்கியமான துர்க்காலயம் நான்கு எனவும், சிவாலயம் மூன்று எனவும், விஷ்ணுவாலயம் எட்டு எனவும், முத்திரைகள் ஐந்து எனவும், தீர்த்தங்கள் நான்கு எனவும், இவற்றின் வரலாறுகள் இவை எனவும் அறிவிப்பது.

## விஷ்ணு க்ஷேத்திர வரலாறு.

காஞ்சி க்ஷேத்திரத்தின்கண் பராசக்தியானவள் பிரமதேவன் காணும்படி அக்னிதிக்கில் வரதராஜமூர்த்தியாய் நின்றனளாதலால் அது விஷ்ணுக்ஷேத்திரம் எனவும், விஷ்ணுசாலை எனவும் பெயர் பெற்றது. இதற்குப் பெயர் ஐந்து. அவையாவன :—

1. ஹரி க்ஷேத்திரம். 2. புண்ணியகோடி க்ஷேத்திரம். 3. வைகுண்ட க்ஷேத்திரம். 4. ஹஸ்திசைல க்ஷேத்திரம். † 5. திரிஸ்ரோத க்ஷேத்திரம். என.

### இதன் எல்லை.

* சந்திரபுஷ்கரணி தீரத்தில் வீற்றிருக்கும் க்ஷேத்திராங்கி என்னும் துர்க்கைக்கு 25 அம்சம் அக்னிதிக்கிலுள்ள சத்தியநாதராலயமே கிழக்கெல்லை.

சத்தியநாதராலயத்துக்கு 25 அம்சம் தெற்கிலுள்ள ¶ பாஞ்சாலிகை ஆலயமே தெற்கெல்லை.

பாஞ்சாலிகை ஆலயத்துக்கு 32 அம்சம் மேற்கிலுள்ள நரசிம்மராலயமே மேற்கெல்லை.

நரசிம்மராலயத்துக்கு 32 அம்சம் வடக்கிலுள்ள § க்ஷேத்திராங்கி ஆலயமே வடக்கெல்லை.

இந்த நான்கெல்லைக்கு உட்பட்ட பிரதேசமே விஷ்ணுசாலை எனப்படும்.

---

† சிவபெருமானால் தேவலோகத்தினின்றும் பெருகிய கங்கை மூன்று பிரிவாய்த் "திரிபதா" என்கிற பெயர்பெற்றுச் செல்வதுபோலும், காஞ்சியில் தேவியினால் நந்திமலையினின்றும் பெருகிய க்ஷீரநதியானது பாகுநதி குண்டலினிநதி என்கிற இரண்டு நதிகளோடு கலந்து மூன்றாய் வருதலால் "திரிஸ்ரோதா" என்கிற பெயர்பெற்றது. பாகுநதி என்பது சேயாறு எனவும், குண்டலினி நதி என்பது வேகவதி என்வும் வழங்குகின்றன.

* சந்திரபுஷ்கரணி என்பது வெள்ளைக்குளம் என வழங்குகின்றது

¶ இவ்வம்மை துரோபதை என வழங்கப்படுகின்றனள்.

§ இவ்வம்மை குதிரை பலிகொண்ட கோயிலாத்தாள் எனவழங்கப் படுகின்றனள்.